உ

# சிவகாமியம்மை

## ஆசிரிய விருத்தம்.

முராஹரி அச்சுக்கூடம்

T. செங்கல்வராய நாயுடு

அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

தண்டபாணி துணை.

# சிவகாமியம்மை

## ஆசிரியவிருத்தம்.

---

நித்யகல்யாணிசுப மங்களசவுந்தரி நிரந்தரியந்த
ரூபி, நிக்கிரகானுக்கிரகநிரஞ்சனி தயாவந்தனிநிருமவிஜெ
கரட்சகி, சுத்தபரிபூரணிகிருபாகரி சதாசக்தி தூலசூட்
சுமகாரணி, சூலிகுணசாலி பரிபாலியென்றனு தினந்து
திசெய்து கதிபெறுவனோ, புத்தமிர்தமொத் தவசனத்தி
இமயத்தரசி பொற்புடனளித்தபுதல்வி, பொங்குபாற்க
டலில்வளர் செங்கண்மால்சோதரி புராந்தகற்கினியம
னைவி, சத்தமறையாகம புராணசாத்திரவொலி தழைத்
திடும் புலியூர்வாழ், சலசமகலாதவல்லிகலைவி னிருவாக
வல்லி தலைவிசிவகாமவல்லியே. 1

உத்தம குணத்தினரிணக்கமறியா மூடனுட்பகை
பருத்தமூடன் ஒப்புரவிலாமூடனன்பரைவிடா மூடனெ
த்தமனதற்றமூடன், சித்தமுளகாமூட நித்தியநியமாதி
கள்செயத் திறமிலாதமூடன், தீதற்றமெஞ்ஞானநெறியி
னிற் கனவிலுஞ்சிந்தை சொல்லாத மூடன், பித்தரினி
மெத்தவள நித்திரியுமூடன்வெகுபோராகொண்டமூடன்
பிரியாத சஞ்சலச் சமுசார மெனனுமொருபேய் பிடித்

தா:டேமுடன், தந்தாப்பாட்டுளோர் தமோதரமுடனின்றருளி
னிழல்பெற்றுய்வனோ, சலசமகலாதவல்லிகலைபினிருவா
கவள்ளி தலைவிசிவகாமவல்லியே. 2

ஆனாலுமம்மம்மாவென்போலு மொருபாவி யம்
புவியிலெங்குமிலையே, அறிவற்றபாவி நன்னெறியற்ற
பாவியில்லறமுறைபிலரியபாவி மானார்கள்விழியிற் பெ
ரும்பாவிநல்லோரை மதியாதகொடியபாவி வசனத்தினி
ஜமற்றமாபாவி மூவாசைவாரியிலல்விழுந்த பாவி, மேனு
ளிலிட்டுண்டு வாழாதபாவி தீவினையெலாஞ்செய்தபாவி
வெஞ்சினமடங்காத பஞ்சமாபாவிநோய் வெறுமைகுடி
கொண். பாவி, சாநாள்கள் வந்தமுனை நினையாத பாவி
நின்றருளினிழல்பெற்றுய்வனோ, சலசமகலாதவல்லி கலை
பினிருவாகவல்லி தலைவிசிவகாமவல்லியே. 3

வாங்குசிலைபோலுடல் வளைந்தொருகைகோலூன்
றிவாயில்வெண்பல்லுநழுவி, வசனமுங்குளறியிருவிழி
களுமிருண்டு நோய்வந்து குடிகொண்டுவெகுவாய், தீங்
குகலைசெய்திடச் சிறுமையெனு மொருபாவி சேர்ந்து
பெருவாதுசெய்யச், சிறுவருந்தாருமிகழ்ந்து நகைசெ
டத் திமூப்புவந்துமேவிட், டோங்குதலை ராண்டு நமனு
ர்வரும்போதினி லுளம்பதைபதைக்குமனமே, யுனது

பொற்பாதநிழலில் வருகவென்றருள் புரிந்துய்யும்வகை செய்யவேண்டுக், தாங்குதலைபுனையன்றி வேறிலைப்போ தமிச்சஞ்சலச்சுகமம்மனே, சலசமகலாதவல்லி கலைபி னிருவாசவல்லி தலைவிசிவகாமவல்லியே. 4

அரிதானஞானிடப் பிறவிவந்தென்னபல னறியா மைதீரவில்லை, யன்பென்றுசொல்லவுங் கேட்டதில்லையா னெனுமகந்தைசற்றகல்வதில்லை, பெரிதான வெஞ்சின மடங்கவிலை யைம்புலப்பிழைவழி பொறுக்கவில்லை,பே ராசைதீரவில்லை நல்லோரிணக்கமென்பிறவிபி லறிந்ததி ல்லை, பரிதரவல்போலெங்கணுந்தாவுபாழ் மனம்பதைப் போய்வதில்லை, பசுபாசபதி பதவியெவ்வாறு நின்பதப் பங்கயத் தடைவதம்மா, சரியாதிநான்கையுமடைந்து நி ன்றவருளத் தாமரையில் வாழுமனமே சலசமகலாதவல் லி தலைவிசிவகாமவல்லியே. 5

ஆலவிடமே வுருவெடுத்துக்கடாவேறி யந்தகனெ னும் பெயர்தரித், தழல்விடுஞ்சூலமும் பாசமுங்கைபிடி த்தாருயிர் குடித்திடவருவ், கால்மறவாமமரைகாழி தரி யாலென்கண்காண வெள்ளைவிடைமேற, கண்ணுதலும் நீயும் வந்தஞ்சஞ்சலஞ்செலென்று காத்தருளவேண்டுமெ ம்மா, மூலமெனஓலமிடும் பாலனைக் காத்தருண் முராரி

சோதரி, மூதண்ட பகிரண்டமும்பெற்ற முதல்விமலையு தவுபதல்விசாலவும் மெய்யன்பருட கமலமலாது சஞ்ச ரித்திடுமன்னமே, சலசமகலாதவல்லி கலைபினிருவாக வல்லி தலைவிசிவகாமவல்லியே. 6

சாகாத வரமுனைக் கேட்கவில்லையம்மனே சாம்போ துகோயிலாமற், சங்கடமிலாமலொரு வஞ்சகமனுர்வரு ஞ்சமையத் திலஞ்சிடாமற் கூகாவெனக்கிளை ஞர்சூழ்ந் துளமயக்கினுங் குறியினைமறந்திடாமற், குவலயமயக் கமெள்ளளவுமில்லாமற் குணங்கள்பேதித்திடாமல், வா காவைம்புலனும் நிலைகலங்காமனுடன் மரணவேதனை யிலாமல், மறைமுடியினிதழூமுன் றிருவடிநிழற்குளே னைவரமளித்தருள் செய்வாய், தேகாதி முதலானமோகா தியாவையுஞ் சிதைத்தருளத் தமிர்தமே தில்லைக்டராய னேயிப் புல்லையடாதமாயிசெல்வி சிவகாமவல்லியே.

ஐயுமோவல்வினைச் சல்லிய மடங்கனுமொடுங்கு மோகமெனனும்பே, பொழியுமோ மூவாசையழியுமோ வெஞ்சினமொதுங்குமோ பாழ்ந்தசிந்தை மரபுமோ கா மாதிமடிபுமோ குணகேடு மறியுமோ சிறியர்னேயம் வளருமோவெய்யன்பு தளருமோ வன்கண்மை வடியு மோ துன்பவெள்ளம், வீயுமோவஞ்ஞானம்விளையுமோ

மெய்ஞ்ஞானம் விலகுமோ வுஜகமாயை வேறுவேறுரு வெடுத்தடலைப்படுபிறவி வேதனையெனும் பெருவனந் தீயுமோவுனதருளை யன்றிப்போன் றிசையுமோ தெய்வ மெ சாத்தருள்செய்வாய் தில்லைநடராயனே புல்லரைய டாதமாயி செல்விசிவகாமியாயியே. 8

சாரமில்லர்தமு சபாமெனுமகலாவி சாரத்திலேயுழ ன்று சந்ததமுமதிலே தலைப்பட்டு வேறுமொருசார்புமி ல்லா தலைத்திட் டமில்லாத, மனவஞ்சகக் கொஞ்சரோ டிணங்கிநர செய்துகெறிசென், றில்லாமை நோயென் றிருதலைக்கொள்ளியு னெருப்பொதது நன்னெறியிலே, வாரமில்லாமல்முழு மருளனுய் திரியுமெனை வாவென்ற ழைத்துநின்றனன் மலரடிக் கடிமைசெயுமவரடிக்கடிமை செய வைத்தாட்சித்தருளுவாய் தீரமில்லாமடப்பிள்ளை யைப் பெற்றவள் சினந்துதள்ளி விடுவதுண்டோ தில் லைநடராயனே யிப்புல்லரையடாதமாயி செல்விசிவகாமி யாயியே 9

இன்னமிப்பாழுடலெடுத்துழலவைப்பையோயினர் பின செலவிருவையோ, வில்லாமை யென்னுமொருபொ ல்லாப்பிலே சற்றுமெண்ணமல் வாழ்விப்பையோ,சின்

னையமிலாக்கொடும் புல்லரோடிணங்கி வீணாள்கழித்திட் வைப்பாயோ, நச்சுவிழியார்கண் மேலிச்சைகொடுபிச்ச கம் நரகெய்திடச்செய்திடச் செய்வையோ, வன்னமுத லாணமுக்கனியெனுஞ் சனிபிடித்தாடலை படச்செய்வை யோ, வடுபிணியெனும் பெருங்கொடுமைக டொடர்ந்த தில்லைக்கழிந்திட வைப்பையோ, தென்னருமைப்புதல் வியெப்படி செய்தாலுமுன்சித்த மென்பாக்கியமம்மா, தில்லைநடராபனே புல்லரைபடாதமாயி செல்வசிவகாமி யாயியே. 10

வீணாவாரப் பிரபஞ்சப் பொய்வாழ்வின் மதிமெ த்தவுமயங்கிமூழ்கி விழலுக்குமென்றுதலை யிட்டிறைப் பார்கள்போல் விணுக்கிழைத்துழைத்து, நாணமலின் மைதிலே யலைப்பூண்டுவீணாள் பலகழிக்குமென்னை நல் லவரிடத்தினி லடுத்தவர்கள சொல்வழிநடத்துநன்னெ றியறிந்திட ஞானசைகொண்டுழலுமுடலாசைதனையொ ழித்தொழியாத சகமனிக்குமுன் பாதாம்புநிழலில்வந்து சேரத் திருவுளங்கனிந்தருள்செய்குவாய், சேணாட்டர்முத லானவுலகெலாங் காக்குமொரு சிறுவனைப்பெற்றகொடி யே தில்லைநடராஜனே யிப்புல்லரை யடாதமாயி செல்வ வகாமியாயியே. 11

காயா திருக்கின்ற சோறெனக்கண்டுமுன் கட்டுவல் வினைகளெல்லாங் கட்டறுத்தாத வக்கருவருத்தைம்புல க் கள்ளரையுமுள்ளடக்கி நோயாதிவெருவித்தைச் சஞ் சலக் குன்றினைநொறுக்கித் தூசுப்படுத்தி நவலருங்காமா தியாரையுங்கூறுபட் டுறுத்திடச்சித்தயினுய், வாயா தமெஞ்ஞானம் வாய்த்தகன்னிலைபெற்று மாளாதபிறவி யின்னம், வாராம லுன்பதப்போதினி நூல்பெற்று மெய் வாழ்வு பெற்றிடுவதன்றோ கேயாதயதிபமேமாயாகசிதி பமே தெய்வமே சைவமபமாக், தில்லைநடாாயனே யிப் புல்லரையடாதமாயி செல்வசிவகாமியாயியே. 12

காளையவதோய்ந்து மெய்க்கட்டறுகழிந்து கற்கல் விமுதலானவெல்லாங், கைவிட்டு மையிட்டக்கண்மாதர் புன்முறுவல் காட்டக்கடும்பிணியெல்லாம், வேளைபிது வெவைக்கடுத்திடர் யடுத்திட மெலிந்துதடுமாறு முன மே, வினையேனுமுன்பதப் போதினிழல் பெற்றுமெய் வேதனை யொழிப்பதென்றோ, மூளைதிசையென்புதோ த்போர்த்த வுபலாசையை முனிந்துசிவ யோகத்திலே, முயலுமெய்யன்ப சிருவினைவலையறுத்து மேன்முத்திக் குவித்தாமலர்த், தாளையேகருமொளி, தயாபரி பராபரிச காயிமகமாயியாயி, சலசமகலாதவல்லி கலையினிரு வாக வல்லி தலைவிசிவகாமி வல்லியே. 13

சிவகாமியம்மை ஆசிரியவிருத்தம்.

முற்றிற்று.